[20th March 1959

Small-scale industries projects

* 900 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri P. G. Manickam, : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சிறு கைத்தொழில் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்து கொடுப்பதற்காகவும் விளம்பரப்படுத்துவதற்காகவும் எந்தெந்த இடங்களிலே விற்பனை நிலையங்கள் அரசாங்க மூலமாக திறக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sales-*cum*-procurement depots for the sale of handicrafts goods have been opened at Tirunelveli and Coimbatore. Sales Emporia for the sale of cottage and small scale industries products have been opened at Madras and Dindigul.

SRI K. B. S. MANI : சார், இந்தச் சிறு கைத்தொழில்கள்மூலம் உற்பத்தி செய்கிற பொருள்களுக்குச் சர்க்கார் முதலீடு இட்டுச் செய்து கொடுக்கிறார்களா ? அல்லது செய்கின்ற பொருள்கள் அத்தியாவசியம் என்று கருதி அவைகளையெல்லாம் விற்பதற்கு வசதி செய்து கொடுக்கிறார்களா ? .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறு தொழில்களில் ஈடுபடுகிறவர்கள் பொருள்களை உற்பத்தி செய்தால் அவைகளை விற்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. என்னென்ன பொருள்களுக்கு விற்பனை வசதி அவசியமோ அவைகளெல்லாம் இந்த விற்பனை நிலையங்களில் வைக்கப்படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : விற்பனை நிலையங்களை ஜில்லா வாரியாக ஏற்படுத்தச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடியவரையில் ஜில்லா வாரியாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : May I know whether these goods of small-scale industries are sold through co-operative societies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have no idea. These are Depots for the purpose of facilitating the sale of goods. It is, however, open to the co-operative societies to take them up.

SRI A. VEDARATHNAM : இந்தச் சிறு கைத்தொழில்கள் மூலம் உற்பத்தியாகிற பொருள்கள் ஏதேனும் அரசாங்கத்துக்குத் தேவை இருந்தால் இந்தத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்கின்ற பொருள்களை வாங்குகிறார்களா ? அல்லது வெளியிலிருந்து வாங்குகிறார்களா ? வெளியிலிருந்து வாங்குவதாக இருந்தால் இனியாகிலும் இந்தப் பொருள்களை வாங்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் கூடிய வரையில் தேவைக்குத் தக்க பொருள்களை இந்தத் தொழில் மூலம் உற்பத்தியாகிற பொருள்களிலிருந்து வாங்குகிறார்கள். எவ்வாறு வாங்குகிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

SRI T. SAMPATH : இந்த சேல்ஸ் எம்போரியா எல்லாம் லாபகரமாக நடக்கின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சேல்ஸ் எம்போரியம் நஷ்டம் ஏற்படக்கூடிய அளவில் நடக்கக்கூடாது என்பதுதான் எண்ணம். முதலில் லாபம் எதிர்பார்க்கவில்லை.

20th March 1959]

SRI M. K SOMASUNDARAM : இந்தச் சிறு கைத்தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களைச் சர்க்கார் வாங்கி விற்க முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் வாங்கி விற்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. தனி மார்க்கெட்டுகளில் விற்கப்படலாம். கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விற்பனையை எடுத்துக் கொள்ளலாம்.

Adult Education Schools in Markanam National Extension Service Block

* 901 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Social (Adult) Education Schools opened so far in the Markanam National Extension Service Block in the South Arcot district; and

(*b*) the amount spent for that purpose?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) None.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : இந்த முதியோர் கல்விக்காகச் செலவிடப்படுகிற பணம் அதற்குத் தகுந்த அளவு பயன்படுகிறது என்று சர்க்கார் கருதுகிறதா ? அப்படி இல்லையென்றால் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்கவோ, திருத்தியமைக்கவோ அரசாங்கம் உடனடியாக முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது மாற்றியமைக்கப்பட்ட திட்டம் அமுலில் இருக்கிறது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இப்பொழுது இந்த அபிவிருத்தி வட்டாரங்களில் 16 வயது, 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இந்தக் கல்வி அளிக்கவேண்டுமென்பது திட்டம். இது நல்ல முறையில் நடந்து வருகிறது என்று அறிக்கையில் இருந்து தெரியவருகிறது.

SRI M. K SOMASUNDARAM : சார், இங்கு கல்வி கற்றுக் கொடுக்க பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கிற ஆசிரியர்களைக் கொண்டு வந்து கற்றுக்கொடுக்கிறார்களா ? அல்லது தனியாக ஆசிரியர்களை நியமிக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டு முறையும் கையாளப்படுகிறது.

MR SPEAKER : கேள்வி 902-ஐ எலெக்ட்ரிசிடி மினிஸ்டர் வந்த பிற்பாடு எடுத்துக்கொள்ளலாம்.

Veterinary aid in Thiruthuraipoondi taluk

* 903 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலுகா பிளாக் டெவலப்மெண்ட் இலாகாவிலிருந்து கால்நடைப் பராமரிப்பை எல்லாம் கால்நடை இலாகாவிற்கு மாற்றப்பட்டதா ?

(ஆ) எப்போது, எதற்காக ?